1979 மார்ச் 16]

தால் ஊதியம் பற்றிச் சொல்லியிருப்பார்கள். வேறு பிரச்சனையையும் கேட்பதால், மறுபடியும் கிருஷ்ணன் எழுந்து கேட்பது போன்ற நிலைதான் ஏற்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா என்று திட்டவட்டமாக விவரமாகக் கேட்டால் சொல்வார்கள் என்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்ளே, எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது.

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான கார்கள் எத்தனை இருக்கின்றன ? தமிழகத்திலேயிருந்து டெல்லிக்குச் செல்லும் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கார்களைக் குறைந்த வாடகையில் பயன்படுத்துவதற்கு அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,

Permission for the use of staff cars attached to the Tamil Nadu House shall be obtained along with the orders for reservation.

அந்தக் கார்களைப் பயன்படுத்த ரிசர்வேஷன் எப்பொழுது நாம் கேட்கிறோமோ அந்த ரிசர்வேஷனை ஒப்புக்கொண்டு கார்கள் கேட்டால் கார்களைத் தர முடியுமா முடியாதா என்பதைத் தெரிவிக்க முடியும். எத்தனை கார்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

பழனி தேவஸ்தான ஊழியர்கள்.

*வினா எண் 422—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தேவஸ்தானத்தில் இலாகாவாரியாக எத்தனை பேர் வேலை செய்கிறார்கள் ?

(ஆ) அதில் எந்தெந்த இலாகாவில் அரிசனங்களுக்கு 18 சத வீதம் வேலை கொடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி தேவஸ்தானம் துணை ஆணையர் அந்தஸ்த்தில் உள்ள செயல் அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது. இலாகா வாரியாக இந்த தேவஸ்தானத்தில் வேலை செய்பவர்களின் விபரமாவது :—

		நபர்கள்.
(1)	திருக்கோயில் மற்றும் இதர இடங்களில் வேலை பார்ப்பவர்கள்	444
(2)	மராமத்து பிரிவில் வேலை பார்ப்பவர்கள் .	10
(3)	மின்சார பிரிவு மற்றும் மின் இழுவை ரயில் பிரிவில் வேலை பார்ப்பவர்கள்	36
	மொத்தம் .	490

(ஆ) திருக்கோயில் உட்துறை ஊழியர்கள் அரசு ஊழியர்கள் அல்ல. திருக்கோயில்களில் அரிசனங்களுக்கு 18 சதவீதம் வேலை அளிக்க வேண்டுமென விதிகளில் வரையறுக்கப்படவுமில்லை. ஆயினும், இத்திருக்கோயிலில் வேலை பார்க்கும் மேற் குறிப்பிட்ட 490 நபர்களில் 77 நபர்கள் (16 சதவீதம்) அரிசனங்கள் ஆவர்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, பழனி தேவஸ்தானத்தில் 490 பேர்கள் பல்வேறு இலாக்காக்களில் வேலை செய்வதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அதில் அரிசனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள 18 சதவீதம் என்ற முறைப்படி, சரியான கவுரவம் மிக்க வேலைகள் அங்கே கொடுக்கப்படவில்லை. ஸ்வீப்பர்கள். தோட்டிகள் போன்ற கீழ்த்தரமான வேலைகள்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, பழைய சட்டத்தைக் காட்டி அதைக் காலங்கடத்தாமல், இந்த அரசாவது அவர்களுக்கு விகிதாச்சார முறைப்படி வேலைகள் கிடைக்க உரிய நடவடிக்கையை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்களுக்காக பொது விதி 22-இல் அரிசனங்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டுமென விதியிருக்கிறது. ஆனால், அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் உள்துறை ஊழியர்கள் அப்படி அல்ல. இருந்தாலும், 16 சதவீதம் என்று இன்றைக்கு வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய யோசனை வருகிற காலங்களில் பணியாளர்கள் நியமிக்கப்படும்பொழுது கவனத்திலே எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 மார்ச் 16]

திரு. க. நாச்சிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பழனியில் அரிசன அர்ச்சகர்கள் எத்தனை பேர்கள் வேலை செய்கிறார்கள். அப்படி அரிசனங்கள் வேலை செய்யா விட்டால், அர்ச்சக ஊழியர்களாக, அவர்களை பழனி கோயிலில் நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அதற்கான விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதுபற்றி விவரத்தைச் சேகரித்து தர இயலும்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, எதிர்காலத்தில் என்னுடைய கோரிக்கையை கவனிப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே, இன்றிலிருந்து அங்கே நியமிக்கக் கூடிய ஒவ்வொரு வேலைக்கும் எந்த உயர்ந்த வேலையாக இருந்தாலும், எந்த வேலையாக இருந்தாலும் அந்த வேலைகள் அரிசனங்களுக்குத் தான் தரப்படும் என்ற ஒரு உத்தரவை அரசு போடுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சட்ட ரீதியான ஒரு உத்தரவு அரசினிடத்திலே இல்லாத காரணத்தாலே, சட்டம் இல்லாத காரணத்தாலே, அப்படிப் பட்ட ஒரு உறுதிமொழியைத் தருவது என்பது சிக்கலை உண் டாக்கலாம். மற்றவர்கள் வேறு பிரச்சினைகளை எழுப்பக் கூடும். என்றாலும், அரிசனங்களுக்கு, அப்படிப்பட்ட நேரங்கள் வருகிறபொழுது, அவர்களுக்கு இந்த விகிதாசாரத்தை மனதிலே எண்ணி வேலைகள் தரப்படும் என்ற அளவிலேதான் இப்பொழுது சொல்லமுடியும்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற பொழுது அங்கே பலர் அரசு ஊழியர்களாக ஆக்கப்படாமல் இருக்கிறார்கள் என்று குறிப் பிட்டார்கள். பழனியில் மட்டுமல்ல, தமிழகமெங்கும் பல்வேறு கோயில்களில் உள்ள ஊழியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப் படாமல் இருக்கிறார்கள். அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலை வரவர்களே, தமிழக ஆலயங்களிலே பணி புரிகிற உட்துறை கட்டளை ஊழியர்கள் என்று அழைக்கப்படுகிற அவர்களை, அரசு ஊழியர்களாக ஆக்குவதிலே வார்த்தை அளவிலே ஒன்றும் சங்கடம் இல்லை. அரசு ஊழியர்களாக அறிவித்தால் பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் சம்பளமாகத் தரவேண்டிய நிலை இருக்கும். அதைச் சமாளிக்க அறநிலையத் துறையிடத் திலே நிதி இல்லை. அதுதான் இன்றைக்கு இருக்கிற பிரச்சினை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, மொத்தம் 490 பேர்களில், 77 பேர்கள்தான் தாழ்த்தப்பட்டவர்கள் பணியாற்றுகிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால், அவர்களிலே அதிகமான பேர்கள், கிட்டத்தட்ட எல்லோருமே 'மீனியல் ஒர்க்கர்ஸ்' என்ற வகையில் தான் இருப்பது மாதிரி தெரிகிறது. பொறுப்பான பதவிகளிலே இருப்பதாகத் தெரியவில்லை. அறநிலையத் துறையில், அரிசனங்கள் 18 சதவிகிதம் என்பதிலிருந்து விதிவிலக்கு அல்லது அதனை அமுல் படுத்த முடியாத நிலையிருக்கிறதென்றால், அறநிலையம் என்பதோ, கோயில்கள் என்பதோ புனிதமானது என்று அரசு கருதுகிறதா ? அந்த இடங்களை நிரப்புவதற்கு அரசு ஏன் தயங்குகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இடங்களை நிரப்புவதற்கு அரசு தயங்குகிறது என்ற பொருளிலே பதில் அளிக்கப்படவில்லை. எதிர்காலத்திலே நியமிக்கப்படுகிற அத்தனை ஊழியர்களும் அரிசனங்கள் என்று உத்தரவாதம் தருவீர்களா என்ற கேள்விக்குப் பதில் அளிக்கப்பட்டது. அப்படிப்பட்ட உத்தரவாதத்தைச் சட்ட சம்மதம் இல்லாமல் தரமுடியாது என்றுதான் பதில் அளித்தேன். ஆகவே, அரிசனங்கள் தாழ்ந்த வேலைக்குத்தான் நியமிக்கப்பட வேண்டுமென்ற அந்த அடிப்படையில் எங்கேயும் வேலைகளில் நியமிக்கப்படவில்லை. பல ஆலயங்களில், நிர்வாகத் துறை அதிகாரிகள் அரிசனங்களாக இருக்கிறபொழுது, அங்கே கீழ் வேலைக்குத்தான் அரிசனங்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்ற கட்டாயத்தில் நியமிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள முடியும்.

கலையழகுடன் அச்சடிக்கப்படும் புத்தகங்களுக்கு பரிசு வழங்குதல்.

*வினா எண் 423—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு செய்தி, அற நிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நேர்த்தியான கலையழகுடன் அச்சடிக்கப்படும் புத்தகங்களுக்கு பரிசு கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

இல்லை.

திரு. போ. கோபாலன் : மாண்புமிகு தலைவரவர்களே, புத்தகங்கள் என்று சொல்லப்படுபவை, கையிலே எடுத்துப் பார்க்க அழகாக இருந்தால்தான் மனதிற்குப் படிக்கவும் கூட சாந்தி கிடைக்கும் என்ற கருத்து நிலவுகிறது. வெளிநாடுகளிலும், இந்தியாவிலே மற்ற இடங்களிலும் அழகான முறையிலே